**கவனிக்க.**- *08.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1837 - 2013 නොවැම්බර් මස 15 වැනි සිකුරාදා - 2013.11.15

*1837 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1549 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2013, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள
முகாமைத்துவ திணைக்களம்

திணைக்கள கரையோர பாதுகாப்பு சேவையின் III ஆம் வகுப்பின்
கரையோரப் பாதுகாப்பு படையணி பதவிக்கு
ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2013

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் கரையோரப் பாதுகாப்பு சேவையின் III ஆம் வகுப்பின் கரையோர பாதுகாப்பு படையணியினர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்காக இந்த அறிவித்தலில் தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நியமிப்பதற்கும் உட்பட்டதாகும்.)

2. **சேவை நிபந்தனைகள்**.- அரச சேவைகள் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள் மற்றும் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் கரையோர பாதுகாப்பு சேவையின் III ஆம் வகுப்பின் பாதுகாப்பு படையணியினர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் :-

2.1 தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவை செய்யும் நிபந்தனைக்கு உட்பட்டதாகும்.

2.2 நியமனம் மூன்று (3) வருட தகுதிகூர் கடமை நிலைக்கு உட்பட்டதாகும். அரச சேவையின் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட அலுவலர் நியமிக்கப்பட்டால் அவர் ஒரு வருட பரிசீலனைக் கால எல்லையின்கீழ் மேற்கொள்ளப்படும்.

2.3 நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு நியமனத் திகதி முதல் மூன்றாவது வேதன நிலைக்கு வருவதற்கு முன்னர் முதலாவது தகுதிகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

2.4 பதவியில் அமர்த்தப்பட்ட பின்னர் 5 வருடத்துக்குள் 2007.05.28 ஆந் திகதிய பொது நிர்வாக 07/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைய ஏனைய இரண்டாம் மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

2.5 நியமனம் கிடைத்த அலுவலர் அரச சேவைகள் ஆணைக்குழுவின் நிபந்தனைகளுக்கும், தாபனக் கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகளுக்கும், காலத்துக்கு காலம் அரசினால் வழங்கப்படும் திருத்தங்களுக்கும் ஏனைய சட்டமுறையான கட்டளைகள், அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

2.6 தமிழ் மொழியில் கடமையாற்றக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

2.7 இந்த நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். மேலும் விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

2.8 தாபனக் கோவை II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையான பிரிவுக்குப் பொருத்தமுடையதாகும்.

3. **சம்பளத் தொகுதியும் அளவுத் திட்டமும்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 (IV) இற்கு அமைய சம்பள குறியீட்டு இல. MN-1-2006A ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூபா 22,040 அளவு மாதாந்த சம்பளத்துக்கு உரித்துடையதாகும்.

4. **வயதெல்லை** :-

4.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்பொழுது அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.

4.2 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.3 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நற்பண்புகளையும் சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **கல்வித் தகைமை** :-

5.1 சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களுக்குக் குறையாது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

மற்றும்

5.2 க. பொ. த. (உ. த.) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒன்றிலாவது (சாதாரண பொதுப் பரீட்சையைவிட) சித்திபெற்றிருத்தல்.

6. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை**.- அடிப்படை தகைமைகளை நிறைவுசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் ஒவ்வொரு விண்ணபதாரியினாலும் பெற்றுக்கொள்ளப்படும் ஆகக்கூடிய புள்ளிகளின் அடிப்படையில் தொடர் வரிசைக் கிரமத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

7. **விண்ணப்பம் அனுப்பும் முறை** :

7.1 இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய ஏ4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, முதல் பக்கத்தில் இல. 1 தொடக்கம் 6 வரையும், எஞ்சிய பகுதி அடுத்த பக்கத்தில் வரக்கூடியவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2013.12.06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கும் பொருட்டு "பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், 4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கியிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கரையோரப் பாதுகாப்பு

சேவையின் III ஆம் வகுப்பின் கரையோர பாதுகாப்பு படையணியினர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**குறிப்பு**.- அரச சேவையில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பத்தை தத்தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

7.2 மாதிரிப்படிவத்துக்கு அமைய சகல விடயங்களையும் முழுமையாக, முறையாகப் பூரணப்படுத்தாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் விண்ணப்பம் தபாலில் தொலைந்துவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்பன போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

7.3 விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. எனினும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் 7 தினங்களுக்கு முன்னர் பரீட்சைக்கு அழைப்புக் கடிதம் கிடைக்காவிடின் கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்களுடன் உடனடியாக கரை யோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு அறியத்தரவும் :-

(i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் ;
(ii) முகவரி.

8. விண்ணப்பதாரரினால் கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களின் நிழற்படப் பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்பு பதிவுச் சான்றிதழ் ;
(ii) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்.

மேலும் பொய்யான தகவல்களை வழங்குதல்.- இந்த நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிப்பதற்காக எவரேனுமொரு விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையற்றவர் என்பது வெளிப்படின் பரீட்சைக்கு முன்னர், நேர்முகப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது பரீட்சையின் பின்னர் ஆகிய ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்திலாவது தெரியவரின் அவரது பரீட்சார்த்தி நிலையானது செல்லுபடியற்றதாக்கப்படும். தரப்பட்ட தகவல்களில், ஏதேனும் முக்கிய விபரங்களை தன்னிச்சையாக மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

9. இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்படாத யாதேனும் விடயங்களில் பிரச்சினைகள் ஏற்படின் அது சம்பந்தமாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கே உரியதாகும்.

(கலாநிதி) அனில் பிரேமரத்ன,
பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவ திணைக்களம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
மாளிகாவத்தை,
2013, ஒற்றோபர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்

திணைக்கள கரையோர பாதுகாப்பு சேவையின் III ஆம் வகுப்பின் கரையோரப் பாதுகாப்பு படையணி பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2013

[ ]
(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)

1. பெயர் :-
   1.1 முதல் எழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியதாக பெயர் (ஆங்கிலத்தில் தனி எழுத்தில், உதாரணம் : SILVA, A.B.,) : ----. Mr./ Mrs./Miss
   1.2 முதல் எழுத்துக்களைக் குறிக்கும் பெயர் (தனித்தனி ஆங்கில எழுத்தில்) :----.
   1.3 முழுப்பெயர் (தமிழில்) :----.

2. முகவரி :-
   2.1 நிரந்தர முகவரி :----.
   2.2 உத்தியோக முகவரி :----.

3. 3.1 வதிவிட மாவட்டம் :----.
   3.2 பிரதேச செயலாளர் பிரிவு :----.
   3.3 இலங்கைப் பிரசையா ? :----.

4. 4.1 பிறந்த திகதி :-

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

   4.2 தேசிய அடையாள அட்டை இல. :

[ | | | | | | | | | ]

5. 5.1 ஆண்/பெண் நிலை :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

   5.2 சமூக அந்தஸ்து :

| | |
|---|---|
| விவாகமாகாதவர் | |
| விவாகமானவர் | |
| தாரமிழந்தவர் | |

6. கல்வித் தகைமை :
   6.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை :
   வருடம் :----. பரீட்சை சுட்டிலக்கம் :----.

| பாடம் | பெற்ற சித்தி | பாடம் | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

(சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

6.2 க. பொ. த. (உ. த.) :
வருடம் :----. பரீட்சை சுட்டிலக்கம் :----.

| பாடம் | பெற்ற சித்தி |
|---|---|
| 1.<br>2.<br>3.<br>4. | |

(சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

7. ஏனைய தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | பாடநெறியில் தோற்றிய நிறுவனம் | பாடநெறியின் கால எல்லை | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3. | | | |

(சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

8. மொழித் திறன் சம்பந்தமான விபரம் :

| மொழி | வாசிப்பு | எழுதுதல் | கதைத்தல் |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3. | | | |

(சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

9. இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானதும், சரியானதுமென இத்தால் உறுதி கூறுகிறேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் யாதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் தெரியவரின் நான் பதவிக்குத் தகுதியற்றவனாகக் கருதப்படுவதற்கும், நியமனத்தின் பின்னராயின் எவ்வித நட்டஈடும் இன்றி பதவி இழக்கச் செய்வதற்கும் ஆளாவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு மட்டும்.)

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ........................................................... எனும் பெயருடையவரினால் தரப்பட்டுள்ள விபரங்களை பரிசீலனை செய்து பார்த்தேன், அவ்விபரங்கள் யாவும் சரியானது எனவும், இவர் தெரிவுசெய்யப்படுமிடத்து தற்போது இவர் வகிக்கும் சேவையிலிருந்து விடுவிப்பு செய்ய முடியும்/முடியாது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை.

திகதி :----.

11-446/1

---

**அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்

*திணைக்கள சேவையின் III ஆம் வகுப்பின் வெளிக்கள தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2013*

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் திணைக்கள சேவையின் III ஆம் வகுப்பின் வெளிக்கள தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்காக இந்த அறிவித்தலில் தரப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைவாக தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நியமிப்பதற்கும் உட்பட்டதாகும்.)

**2. சேவை நிபந்தனைகள்**.- அரச சேவைகள் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள் மற்றும் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அமைந்து திணைக்கள சேவையின் III ஆம் வகுப்பின் வெளிக்கள தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் :-

2.1 தேர்ந்தெடுக்கப்படும் அலுவலர் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் சேவை செய்யும் நிபந்தனைக்கு உட்பட்டதாகும்.

2.2 நியமனம் மூன்று (3) வருட தகுதிகூர் கடமை நிலைக்கு உட்பட்டதாகும். தற்பொழுது அரச சேவையின் பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட அலுவலர் நியமிக்கப்பட்டால் அவர் ஒரு வருட பரிசீலனைக் கால எல்லையின்கீழ் மேற்கொள்ளப்படும்.

2.3 நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு நியமனத் திகதி முதல் மூன்றாவது வேதன நிலைக்கு வருவதற்கு முன்னர் முதலாவது தகுதிகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

2.4 பதவியில் அமர்த்தப்பட்ட பின்னர் 5 வருடத்துக்குள் 2007.05.28 ஆந் திகதிய பொது நிர்வாக 07/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைய ஏனைய இரண்டாம் மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

2.5 நியமனம் கிடைத்த அலுவலர் அரச சேவைகள் ஆணைக்குழுவின் நிபந்தனைகளுக்கும், தாபனக் கோவையின் நிபந்தனைகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகளுக்கும், காலத்துக்கு காலம் அரசினால் வழங்கப்படும் திருத்தங்களுக்கும் ஏனைய சட்டமுறையான கட்டளைகள், அமைச்சு மற்றும் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்து ஒழுகுதல் வேண்டும்.

2.6 இந்த நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையது மாகும். விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

2.7 தாபனக் கோவை II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையான பிரிவுக்குப் பொருத்தமுடையதாகும்.

**3. சம்பளத் தொகுதியும் அளவுத் திட்டமும்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 (IV) இற்கு அமைய சம்பள குறியீட்டு இல. PL-1-2006A ரூபா 11,730 - 10 x 120 - 10 x 130 - 10 x 145 - 12 x 160 - ரூபா 17,600 அளவு மாதாந்த சம்பளத்துக்கு உரித்துடையதாகும்.

**4. வயதெல்லை :**

4.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். தற்பொழுது அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.

4.2 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.3 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நற்பண்புகளையும் சிறந்த தேகாரோக்கியம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**5. கல்வித் தகைமை :**

5.1 க. பொ. த. (சா. த.) பரீட்சையில் இரு தடவைகளில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களுக்குக் குறையாது சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

6. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை**.- அடிப்படை தகைமைகளை நிறைவுசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் ஒவ்வொரு விண்ணப்பதாரியினாலும் பெற்றுக்கொள்ளப்படும் ஆகக்கூடிய புள்ளிகளின் அடிப்படையில் தொடர் வரிசைக் கிரமத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**7. விண்ணப்பம் அனுப்பும் முறை :**

7.1 இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரிப் படிவத்துக்கு அமைய ஏ4 அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி, முதல் பக்கத்தில் இல. 1 தொடக்கம் 6 வரையும், எஞ்சிய பகுதி அடுத்த பக்கத்தில் வரக்கூடியவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2013.12.06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கும் பொருட்டு "பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், 4 ஆவது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கியிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "திணைக்கள சேவையின் III ஆம் வகுப்பின் வெளிக்கள தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்" எனத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

**குறிப்பு**.- அரச சேவையில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பத்தை தத்தமது திணைக்கள/ நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

7.2 மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய சகல விடயங்களையும் முழுமையாக, முறையாகப் பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அத்துடன் விண்ணப்பம் தபாலில் தொலைந்துவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது என்பன போன்ற முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

7.3 விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. எனினும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் 7 தினங்களுக்கு முன்னர் பரீட்சைக்கு அழைப்புக் கடிதம் கிடைக்காவிடின் கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்களுடன் உடனடியாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு அறியத்தரவும் :-

(i) விண்ணபதாரரின் முழுப்பெயர் ;
(ii) முகவரி.

8. விண்ணப்பதாரரினால் கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களின் ஒளிப்படப் பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்பு பதிவுச் சான்றிதழ் ;
(ii) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்.

மேலும் பொய்யான தகவல்களை வழங்குதல்.- இந்த நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிப்பதற்காக எவரேனுமொரு விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையற்றவர் என்பது வெளிப்படின் பரீட்சைக்கு முன்னர், நேர்முகப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அல்லது பரீட்சையின் பின்னர் ஆகிய ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்திலாவது தெரியவரின் அவரது பரீட்சார்த்த நிலையானது செல்லுபடியற்றதாக்கப்படும். தரப்பட்ட தகவல்களில், ஏதேனும் முக்கிய விபரங்களை தன்னிச்சையாக மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

9. இந்த வர்த்தமானியில் குறிப்பிடப்படாத யாதேனும் விடயங்களில் பிரச்சினைகள் ஏற்படின் அது சம்பந்தமாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கே உரியதாகும்.

கலாநிதி அனில் பிரேமரத்ன,
பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவ திணைக்களம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர
மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
மாளிகாவத்தை,
2013, ஒற்றோபர் 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்

திணைக்கள சேவையின் III ஆம் வகுப்பின் வெளிக்கள தொழிலாளர் பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2013

| |
|---|
| |

(அலுவலகப் பாவனைக்கு மட்டும்)

1. பெயர் :-

1.1 முதல் எழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியதாக பெயர் : Mr./Mrs. Miss. (ஆங்கிலத்தில் தனி எழுத்தில், உதாரணம் : SILVA, A.B.,) :----.

1.2 முதல் எழுத்துக்களைக் குறிக்கும் பெயர் (தனித்தனி ஆங்கில எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (தமிழில்) :----.

2. முகவரி :-
   2.1 நிரந்தர முகவரி :----.
   2.2 உத்தியோக முகவரி :----.

3. 3.1 வதிவிட மாவட்டம் :----.
   3.2 பிரதேச செயலாளர் பிரிவு :----.
   3.3 இலங்கைப் பிரசையா ? :----.

4. 4.1 பிறந்த திகதி :-

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

4.2 தேசிய அடையாள அட்டை இல. :

[ | | | | | | | | | ]

5. 5.1 ஆண்/பெண் நிலை :

ஆண் [ ]
பெண் [ ]

5.2 சமூக அந்தஸ்து :

விவாகமாகாதவர் [ ]
விவாகமானவர் [ ]
தாரமிழந்தவர் [ ]

6. கல்வித் தகைமை :
   6.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை :
   வருடம் :----. பரீட்சை சுட்டிலக்கம் :----.

| பாடம் | பெற்ற சித்தி | பாடம் | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

(சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

7. ஏனைய தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | பாடநெறியில் தோற்றிய நிறுவனம் | பாடநெறியின் கால எல்லை | பெற்ற சித்தி |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

8. மொழித் திறன் சம்பந்தமான விபரம் :

| மொழி | வாசிப்பு | எழுதுதல் | கதைத்தல் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

(சான்றிதழ்களின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

9. இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானதும், சரியானதுமென இத்தால் உறுதி கூறுகிறேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் யாதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் தெரியவரின் நான் பதவிக்குத் தகுதியற்றவனாகக் கருதப்படுவதற்கும், நியமனத்தின் பின்னராயின் எவ்வித நட்டஈடும் இன்றி பதவி இழக்கச் செய்வதற்கும் ஆளாவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

(தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு மட்டும்.)

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ........................................................... எனும் பெயருடையவரினால் தரப்பட்டுள்ள விபரங்களை பரிசீலனை செய்து பார்த்தேன், அவ்விபரங்கள் யாவும் சரியானது எனவும், இவர் தெரிவுசெய்யப்படுமிடத்து தற்போது இவர் வகிக்கும் சேவையிலிருந்து விடுவிப்பு செய்ய முடியும்/முடியாது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை.

திகதி :----.

11-446/2

---

## நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு

### வணிகக் கப்பற்றுறைப் பணிப்பாளர் அதிபதியின் அலுவலக பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு

நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின் வணிகக் கப்பற்றுறை பணிப்பாளர் அதிபதியின் அலுவலகத்தில் இங்கு கீழ்க்குறிப்பிடப்படும் பதவிக்கு தகைமைபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2013.12.17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவியின் பெயர் | ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் | பதவி எண்ணிக்கை |
|---|---|---|
| உதவி அரசாங்க (பொறியியலாளர்) கப்பல் அளவையாளர் | தரம் II | 1 |

**கல்வித் தகைமைகளும் அனுபவமும் :**

*கல்வித் தகைமைகள்.-* கடல் பொறியியல் கவனிப்புப் பணிகள் பொறுப்பு உத்தியோகத்தர் (வரையறுக்கப்படாத) சான்றிதழ் பெற்றிருத்தல்.

*அனுபவம்.-* 300 உவாட்டிற்கு மேற்பட்ட ஆற்றலுடைய என்ஜினைக் கொண்ட கடல் பிரயாணத்தில் ஈடுபடும் வணிகக் கப்பல் ஒன்றில் கவனிப்புப் பணிகள் (பொறியியலாளர்) உத்தியோகத்தர் ஒருவராக இரண்டு (2) வருட கால அனுபவம் இருத்தல்.

*2.* **உடற்றகுதி**.- விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் இலங்கையின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு ஆட்படுதலும் வேண்டும்.

*3.* **பிற தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாய் இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்றுக்கு அல்லது அதற்கு முன்னர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளை எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். அவ்வாறு அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*4.* **வயதெல்லை**.- *21* வயதிற்குக் குறையாமலும் *45* வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

*5.* **சம்பள அளவுத்திட்டம்**.- ரூ. 16,720 - 10 x 320 - 11 x 365 - 15 x 450 - ரூ. 30,685.
(மாதாந்தச் சம்பளத்துக்கு மேலதிகமாக தொழில்சார் படியொன்றும் வழங்கப்படும்.)

*6.* **ஆட்சேர்ப்புத் திட்டம்**.- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் தகைமைகள் பரிசீலனை செய்யப்பட்டு, பின்வரும் புள்ளித்திட்டத்திற்கு அமைவாக புள்ளிகள் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் திறமை அடிப்படையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

| | பரிசீலனைசெய்து புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| (1) | மேலதிக கல்வித் தகைமைகள் | 30 |
| (2) | தொழிற் தகைமைகள் | 25 |
| (3) | மேலதிக அனுபவம் (ஆட்சேர்ப்புச் செய்யும்போது பரிசீலனை செய்யப்படும் அனுபவத்திற்கு மேலதிகமாக) | 20 |
| (4) | ஆங்கில மொழி தேர்ச்சி | 10 |
| (5) | கணினி தேர்ச்சி | 10 |
| (6) | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைகள் | 05 |
| | மொத்தம் | 100 |

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்தப்படல் வேண்டும்.

*7.* **விண்ணப்பிக்கும் முறை :**

(i) இந்த வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் 2013.12.17 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ''பணிப்பாளர் மா அதிபதி, வணிகக் கப்பற்றுறை பணிப்பாளர் மா அதிபதியின் அலுவலகம், இலக்கம் 43/89, பிறிஸ்ரல் கட்டடம், 1 ஆம் மாடி, யோர்க் வீதி, கொழும்பு 1'' என்னும் முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவிப்பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை இயைபுள்ள திணைக்களத் தலைவர்களின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழியே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

வணிகக் கப்பற்றுறை பணிப்பாளர் மா அதிபதி.

வணிகக் கப்பற்றுறை பணிப்பாளர் மா அதிபதியின் அலுவலகம்,
நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு,
இல. 43/89, ''பிறிஸ்ரல் கட்டடம்'', 1 ஆம் மாடி,
யோர்க் வீதி,
கொழும்பு 1.
2013, நவெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வணிகக் கப்பற்றுறைப் பணிப்பாளர் மா அதிபதியின் அலுவலகத்தில் உதவி அரசாங்க கப்பல் அளவையாளர் (பொறியியலாளர்) பதவி**

1. முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. தொலைபேசி இலக்கம் :----.
4. பிறந்த திகதி :
   2013.11.15 ஆந் திகதியன்று வயது-
   வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.
4. இனம் :----.
5. கல்வித் தகைமைகள் :----.
6. தொழில் தகைமைகள் :----.
7. தொழில் மற்றும் பயிற்சி தொடர்பான விபரங்கள் :----.
8. தற்போதைய தொழில் :----.

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதாவது நியமனம் வழங்க முன்னர் உண்மையற்றவையென அல்லது பிழையானவை எனத் தெரியவந்தால் அதன் காரணமாக நான் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் இந்தத் தவறு தெரியவந்தால் எந்தவித நட்டஈடும் வழங்கப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11-498

## போக்குவரத்து அமைச்சு

## சட்ட உத்தியோகத்தர் பதவி (நிறைவேற்று சேவை தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்பு

போக்குவரத்து அமைச்சில் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- அரசாங்க சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பகாரரிடையே இருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கைக் கேற்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் தெரிவு செய்யப்படுவர். கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சை அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடுதல் திட்டத்தின் பந்தி 6 இற்கமைவாக நடாத்தப்படும்.

2. **வேண்டப்படும் தகைமைகள் :**

(i) *கல்வி மற்றும் உயர்தொழில் தகைமைகள்.*- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நன்கு மதிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டதாரியாக இருப்பதுடன் உயர்நீதிமன்றத்தில் ஒரு சட்டத்தரனியாகச் சத்தியப் பிரமாணம் எடுத்திருக்கவும் வேண்டும் ;

(ii) *அனுபவம்.*- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் எடுத்த பின் மூன்று (03) ஆண்டுகளுக்கும் குறையாத முயற்சியுடன் கூடிய உயர் தொழில் அனுபவம் கொண்டவராயிருக்க வேண்டும்.

(iii) *பௌதிக தகைமைகள்.*- ஒவ்வொரு விண்ணப்பகாரரும் இலங்கையின் எப்பாகத்திலும் தமது பதவிக்குரிய கடமை களைச் செய்வதற்கு உடல், உள ரீதியாகப் பொருத்தமுடைய வராய் இருத்தல் வேண்டும்.

(iv) *வேறு தகைமைகள் :*

* இலங்கை குடிமகனாய் இருக்க வேண்டும்.
* விண்ணபகாரர் அதிசிறந்த ஒழுக்கமுடைய வராய் இருக்க வேண்டும்.
* விண்ணப்ப முடிவுத்திகதியின் போது தேவை யான தகைமைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

3. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய நன்மை கொண்டதுமாகும். விதவைகள்/ தபுதாரிகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு உதவுதொகை செலுத்தப்பட வேண்டும் ;

(ii) நியமனம் மூன்றாண்டு காலத்துக்கு தகுதிசார் நிலைக்குட்பட்ட தாயிருக்கும். சட்ட உத்தியோகத்தர் தரம் III இற்கான ஆட்சேர்ப்பின் பின்பு மூன்றாண்டு காலத்துக்குள் விதிக்கப் பட்ட முதலாவது வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி எய்த வேண்டும்;

(iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 07/2007 இன் படி பதவிக்கு நியமனம் பெற்றதிலிருந்து ஐந்தாண்டு காலத்துள் அவர் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழியுடன் ஏனைய அரச கரும மொழியில் தேர்ச்சி பெற வேண்டும் ;

(iv) இந்த நியமனம் 20.02.2009 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை விதிகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் தாபனக் கோவைக்கு அமைவாகவும் இருக்கும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கான மாதச் சம்பள அளவுத்திட்டம் ரூ. 22,935 - 10 X 645 - 8 X 790 - 17 X 1,050-ரூ. 53,555 (அ.நி. சுற்றறிக்கை இல. 06/2006 சம்பளப்பகுதி இ. 1-2006) இன் நியதிகளின்படி.

6. கீழே தரப்பட்ட புள்ளியிடும் முறை கட்டமைப்புசார் நேர்முகப் பரீட்சைக்கு அடிப்படையாய் அமையும்.

| | பாடங்கள் | | அதியுயர் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | 20 |
| | நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பெற்ற சட்டத்திலான பட்டம் | | |
| | * முதலாம் வகுப்புச் சித்தி | 20 | |
| | * இரண்டாம் வகுப்பு உயர்தரச் சித்தி | 15 | |
| | * இரண்டாம் வகுப்பு தாழ் நிலைச் சித்தி | 10 | |
| | சட்டக் கல்லூரி இறுதியாண்டுப் பரீட்சையில் முதலாம் வகுப்புச் சித்தி. | 15 | |
| | கல்லூரி இறுதியாண்டுப் பரீட் சையில் இரண்டாம் வகுப்புச் சித்தி | 10 | |
| | (அதி உயர் தகைமையின் மட்டிலேயே புள்ளிகள் வழங்கப்படும். ஒன்றில் பட்டப்படிக்கு அல்லது சட் டக் கல்லூரித் தகைமைக்கு) | | |
| 2 | **மேலதிக உயர் தொழில் தகைமைகள் :** | | 15 |
| | நன்கு மதிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பொருத்த முடைய துறையில் ஒரு ஆண் டுக்கும் குறையாத பட்ட மேற் படிப்பு திப்புளோமாப் பாட நெறி (திப்புளோமா பட்டம் ஒவ்வொன்றுக்கும் 05 புள்ளிகள்) | | |

| | பாடங்கள் | | அதியுயர் புள்ளிகள் |
|---|---|---|---|
| | நன்கு மதிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பொருத்தமுடைய துறையில் 06 மாதங்களுக்கும் குறையாத திப்புளோமா பாடநெறி ஒன்றுக்கு (திப்புளோமாப் பாடநெறி ஒவ்வொன்றுக்கும் 03 புள்ளிகள்)<br><br>நன்கு மதிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பொருத்தமுடைய துறையில் 03 மாதங்களுக்குக் குறையாத சான்றிதழ் பாடநெறி (ஒவ்வொரு திப்புளோமாவுக்கும் 02 புள்ளிகள்) | | |
| 3 | **மேலதிக அனுபவம் :**<br>அரசாங்க சேவையில் அல்லது தனியார் துறையில் சட்டத்தரணியாகத் தொழில் புரிந்த அனுபவம். (ஒவ்வொரு ஆண்டுக்கும் 05 புள்ளிகள் என்ற கணக்கில் ஆகக் கூடியது 30 புள்ளிகள். சட்டத்தரணியாக அடிப்படைத் தகமைகளைப் பெறுவதற்கெனத் தொழில் புரிந்த 03 ஆண்டுக்காலம் நீங்கலாக)<br><br>(மேலதிக அனுபவம் 20 ஆண்டுகளுக்குக் குறையாத காலம் சேவை யாற்றி முடித்த ஒரு சட்டத்தரணியால் அல்லது ஜனாதிபதி சட்டத்தரணியால் அல்லது நீதிபதியால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.) | | 30 |
| 4 | **கணினி அறிவு :**<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் பட்டப் படிப்புப் பாடநெறிக்கு பிரதான பாடமாக தகவல் தொழில் நுட்பவியலைத் தொடர்ந்திருக்க வேண்டும்.<br><br>தகவல் தொழிநுட்பவியலில் திப்புளோமாப் பாடநெறிக்கான அரசாங்கத்தால் நன்கு மதிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 06 மாதங்களுக்குக் குறையாத காலத்துக்கு தொடர்ந்திருக்க வேண்டும். | | 15 |
| | தகவல் தொழிநுட்பவியல் சான்றிதழ் பாடநெறியில் அரசாங்கத்தால் மதிக்கப் படும் நிறுவனம் ஒன்றில் 03 மாதங்களுக்கு குறையாத காலத்துக்கு தொடர்ந்திருக்க வேண்டும் | | |
| 5 | **ஆங்கிலமொழித் தேர்ச்சி :**<br>பட்டப்பின் படிப்பு/பட்டப் படிப்பு/சட்டப் பட்டப்பின் படிப்பு/சட்டப் பட்டப் படிப்பு (பொருத்தமுடைய எல்லா வினாத்தாள்களுக்கும் ஆங்கில மொழியில் விடை எழுதியிருக்க வேண்டும். | 15 | 15 |
| | ஆங்கிலமொழியிலான :<br>திப்புளோ மாப் பாடநெறிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் மதிக்கப் பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது அரசாங்கத்தால் மதிக்கப்பட்ட ஒரு நிறுவனம். | 10 | |
| | சான்றிதழ் பாடநெறி பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவால் மதிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது அரசாங்கத்தால் மதிக்கப்பட்ட ஒரு நிறுவனம் | 05 | |
| 6 | நேர்முகப் பரீட்சையின்போது வெளிக்காட்டப்பட்ட நற்பண்புகள் | | 05 |
| | மொத்தம் | | 100 |

**குறிப்பு:-**

i. விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு முன்பே விண்ணப்பதாரிகள் வேண்டப்படும் தகைமைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். எல்லா விதத்திலும் பூரணமான விண்ணப்பங்கள் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

ii. நேர்முகப் பரீட்சையின் போது எல்லாச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளும் முறையாகச் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்.**– நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கென பின்னாற் காணும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. (அ) விண்ணப்பங்கள் யாவும் 15.12.2013 ஆந் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக பின்வரும் விலாசத்துக்குப் பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படவேண்டும். இத்திகதிக்குப்பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :-

செயலாளர்,
போக்குவரத்து அமைச்சு,
இல. 01, டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு - 10.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த அறிவித்தலின் இறுதியிலுள்ளது. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை A4 அளவு கொண்ட கடதாசியில் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்திலேயே நிரப்ப வேண்டும் என்பதுடன் முதல் பக்கத்திலுள்ள 1-8 வரையான விடயங்கள் மற்றும் பக்கம் 2 இல் உள்ள 9 தொடக்கம் 15 வரையான விடயங்களும் 3 ஆம் பக்கத்தில் உள்ள 16-17 வரையான விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "போக்குவரத்து அமைச்சில் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பதாரியின் விண்ணப்பப்படிவத்திலான கையொப் பம் அரசாங்கப் பாடசாலையின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/ ஆயுதப்படைகளின் ஆணைபெற்ற உத்தியோகத்தர் அல்லது மாதம் ஒன்றுக்கு ரூ. 22,935 திரட்டிய சம்பளமாகப் பெறும் அரச சேவையில் நிரந்தரப் பதவியிலுள்ள ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தாம் சேவையாற்றும் திணைக்களத் தலைவரின் ஊடாகத் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(உ) இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்ததாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்து விட்டன அல்லது தாமதமாகின போன்ற முறைப்பாடுகள் எவையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. **பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தல்**.- உம்மால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்திலான ஏதேனும் தகவல்கள் தவறானவை அல்லது பொய்யானவை என ஆட்சேர்ப்புக்கு முன் அல்லது ஆட்சேர்ப்புக்குப் பின் கண்டுபிடிக்கப்பட்டாவிட்டால் உங்கள் தகுதியாம் தன்மை நிராகரிக்கப்படும்.

ஆட்சேர்ப்பின் பின்பு எந்தவொரு பிழையோ அல்லது பொய்யான தகவலோ கண்டுபிடிக்கப்பட்டால் பொருத்தமுடைய நடைமுறைக்கு அமைவாக சேவையில் இருந்தும் விலக்கி விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

10. இங்கு தரப்படாத வேறு ஏதேனும் பற்றிய விடயம் தொடர்பிலும் வெற்றிடத்தை நிரப்புவதோ அல்லது நிரப்பாமல் விட்டு விடுவதோ என்பது பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமையை அரசாங்க சேவை ஆணைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
போக்குவரத்து அமைச்சு.

போக்குவரத்து அமைச்சு,
இல. 01, டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

அலுவலக உபயோகத்துக்கு மட்டும்

மாதிரி விண்ணப்பப்படிவம்

**போக்குவரத்து அமைச்சு**

சட்ட உத்தியோகத்தர் பதவி

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களம்) :----.
(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலம்) :----.
(iii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (சிங்களம்) :----.
(iii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் (ஆங்கிலம்) :----.

2. முகவரி :
(i) அலுவலக :----.
(ii) சொந்த :----.

3. தொலைபேசி இல. :
(i) அலுவலக :----.
(ii) சொந்த :----.

4. (i) தற்போது வகிக்கும் பதவியும் பணி செய்யும் இடமும் :----.
(ii) மேற்சொன்ன பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.

5. தேசிய ஆளடையாள அட்டை இல. :----.

6. (i) ஆணா/பெண்ணா ? :----.
(ii) விவாகமானவரா, தனியாளா, விதவையா அல்லது தபுதாரியா :----.

7. (i) பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

(ii) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

8. நீர் மரபு வழியிலா அல்லது பதிவினாலா இலங்கை குடிமகன் ? : ----.

9. கல்வி மற்றும் உயர் தொழில் தகைமைகள் :----.

(i) சித்தியடைந்த/உயர் தொழில் மற்றும் தொழில்நுட்பவியல் தகைமைகள் குறிப்பிடப்பட வேண்டும் :

| பரீட்சை | ஆண்டு | பிரதான பாடங்கள் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) உயர் நீதிமன்றில் விண்ணப்பதாரர் ஒரு சட்டத்தரணியாகச் சத்தியம் செய்த ஆண்டு :----.
(iii) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வரை சட்டத்தரணியாகச் சேவையாற்றிய காலம் :----.

10. அனுபவம் :
   (i) நிறுவனம் :----.
   (ii) சேவையாற்றிய காலம் :----.

11. கணினி அறிவில் உள்ள அனுபவம் :----.

12. பிற தகைமைகள் :----.

13. ஆங்கில மொழியில் தேர்ச்சி :----.

14. தொடர்புடைய வேறு தகவல்கள் :----.

15. இதற்கு முன் விண்ணப்பதாரர் ஏதேனும் குற்றவியல் குற்றம் தொடர்பில் நீதிமன்றில் சமுகமளித்துள்ளாரா ? அவ்வாறாயின் இது தொடர்பிலான விபரங்கள் :----.

16. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அத்தியாயம் V இற்கமைய நீர் அரசாங்க சேவையில் நியமனம் பெறத் தகைமை இல்லாதவரா ? : ----.

17. மேலே என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை என இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

18. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல் :** போக்குவரத்து அமைச்சில் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்கும் திரு./திருமதி .................................... என்பவர் எனக்கு நன்கு பரிச்சயமானவர் என்பதுடன் 2013, ..................... மாதம் ..................... ஆந் திகதியன்று எனது முகதாவில் தனது கையொப்பத்தை வைத்தார் என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :----.

19. **திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**
இந்த நிறுவனத்தில் ................................. பதவி வகிக்கும் போக்குவரத்து அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................ அவர்களின் விண்ணப்பம் இத்தால் சிபாரிசு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அவரது வேலையும் நடத்தையும் திருப்திகரமானதாக உள்ளதுடன் அவருக்கு எதிராக எதுவித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என்பதையும் சான்றுபடுத்துகின்றேன்.

அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் அவர் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார்/விடுவிக்கப்பட மாட்டார்.

----,
திணைக்கள/நிறுவன தலைவரின் கையொப்பம்.
அலுவலக முத்திரை

திகதி :----.

11-539